RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s638

OPEN ACCESS

# தமிழ்ச்செல்வியின் பொன்னாச்சரம் புதினத்தில் பெண்ணியம்

ப.பா. சுபாஷினி [அ, *], அ. குபேந்திரன் [அ]

[அ] தமிழ்த்துறை, சேலம் சௌடேஸ்வரி கல்லூரி, சேலம்-636010, தமிழ்நாடு, இந்தியா.

# Feminism in Thamizhselvi's Ponnacharam Novel

P.B. Subashini [a, *], A. Gubendran [a]

[a] Department of Tamil, Salem Sowdeshwari College, Salem-636010, Tamil Nadu, India

* Corresponding Author: subamukesh2013@gmail.com

Received: 28-10-2021
Revised: 14-04-2022
Accepted: 07-05-2022
Published: 30-07-2022

## ABSTRACT

Feminism, which is the right half of the world, is being suppressed, ruled, and enslaved for various circumstances and reasons. Feminism is the awakening from this slavery, liberated, thinking about their lives and with the intention of progressing in life. The feminist tendency was being talked about very seriously in the 1990s. Having initially fought against the most horrendous oppression, it now exists at many levels of society. At the beginning of the novel, an eight-year-old girl named Ponnacharam is introduced by the author through a goat-grazing scene. Her birth is viewed as an unwanted birth. Ponnacharam was the eighth child born to the Saatthaiya and Kurunthayi couple. Being born as the eighth, the mother does not dare repent and give it up and puts the child at the feet of the Naganar temple priest. Starting from the fact that he gives the child the name 'Ponnacharam' and sends it away, the life in the sheep pen becomes the life of this child. Ponnacharam transforms herself into a person who loves that life very much. She is shown to have taken to shepherding goats at the age of seven and has been doing it with some kind of commitment. She, who drives herds while tending goats, does not sit in one place while she is in trouble. The fact that she liked the work of herding the sheep with her father, grazing the goat with her mother, boiling rice and water in the hamlet, keeping the sheep in the stable, and cleaning the dung of the sheep would reveal Ponnacharam's professional interest. Thus, the nature of the feminist characters in Tamilselvi's novels can be understood.

**Keywords:** Ponnacharam Novel, Tamilselvi, Feminism, Slavery

## முன்னுரை

உலகில் சரிபாதியாக விளங்கும் பெண்ணியம் பல்வேறு சூழ்நிலைகளாலும் காரணங்களாலும் அடக்கி ஆளப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அடிமைத்தனத்தில் இருந்து விழிப்புணர்ச்சி அடைந்து விடுதலைப் பெற்று தங்கள் வாழ்வியலைக் குறித்துச் சிந்தித்து முன்னேற்ற நோக்கத்தோடு தோன்றியதே பெண்ணியம். பெண்ணியப் போக்கு ஆயிரத்து தொண்ணூறுகளில் மிகத் தீவிரமாகப் பேசப்பட்டு வந்தது. ஆரம்பத்தில் மிகப்பயங்கர அடக்குமுறையை எதிர்த்து கடந்து, இப்பொழுது சமூகத்தில் பல தளங்களில் நிலை கொண்டிருக்கிறது. இருபத்தோராம் நூற்றாண்டுகளில் தமிழ் நாவல்களில் பெண்ணிய சிந்தனைகள் பெண்ணிய வளர்ச்சிக்கு எத்தகைய பங்கு வகிக்கிறது. அதில் பொன்னாச்சரம் புதினம் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது (Tamilselvi, 1998). பெண்கள் தங்கள் நிலையிலிருந்து மாறித் தங்கள் தேவைகளையும் உரிமைகளையும் பெற ஏற்படுத்திக் கொண்ட அமைப்பே பெண்ணியம் ஆகும். “பெண்களின் தேவையை நிறைவேற்றிட அவர்கள் சார்பாக வாதாடுவது போராடுவது (Aclunoeay of the clains of women)” என்று அகராதி விளக்கம் தருகிறது. தன்

நூலில் “பெண்ணியம் என்ற கோட்பாடு பெண்களை நவீன மயமாக்கும் சிந்தனையின் எழுச்சியாகும்” என்று கூறுகிறார் (Prema, 1998).

## வெள்ளந்தி குணம்

சூதுவாதறியா வெகுளிப்பெண் பொன்னாச்சாரமாவள். மேலும் தந்தைப் பாசத்திற்கு ஏங்குபவளாக அடிக்கடி கூறப்படுகிறாள். ஆடுகளின் மீது இவள் கொண்ட அன்பு எல்லையற்றது. கீழ்ப்படியும் குணமும் தொழிலில் கவனமும் இவளை மற்றவர்களிடத்தினின்று பிரித்துக் காட்டுகின்றன. பத்துவயது அடைந்துவிட்ட பொன்னாச்சரம் இரவில் தன் பக்கத்தில் வந்து படுத்துக்கொள்ளக் கூடாது என்று தந்தை சாத்தய்யா கண்டிப்புக் காட்டுகிறான். அதன் பொருள் புதியாதக பொன்னாச்சரம் ஏன்? என்று வினாத் தொடுக்கிறாள். மகள் பெரியவளானதைச் சாத்தய்யா சூசகாக உணர்த்துகின்றார். அப்பொழுதும் விடாப்பிடியாக அவன் பக்கத்தில் படுப்பது பற்றி வினவுகின்றாள். தாய் குருந்தாயி இடையில் புகுந்து மகளை அதட்டுகிறாள். வேறுவழியின்றிப் பொன்னாச்சரம் தாயின் அருகில் சென்று படுக்கிறாள். பின்பு “அது எதுக்குன்னாத்தா பொம்பளப்புள்ளைக எப்பவும் அம்மா கூடத்தான் படுத்துப் பழகணும் தூங்கும்போது துணிமணி விலகும் தூக்கத்துல நல்ல இடம் கெட்ட இடம் தெரியாம கைகாலுபடும். அதுக்காகத்தான் சொன்னாக எனத் தாய் குறுந்தாயி ஆதரவாக அதற்கான காரணத்தை எடுத்துரைத்துச் சமாதானப்படுத்துகிறாள். இச்செய்தி பொன்னாச்சரத்தின் வெகுளித்தனத்தை விளக்குவதாகும்.

## குழந்தையுள்ளம்

ஆடு மேய்க்கும் இடையர்கள் பெரும்பாலும் இரவு வேளையில் தங்கள் வலசைக்கு வந்து தங்கமாட்டார்கள். ஆடு காவலுக்குக் கிடைப்பக்கமே முறை வைத்துப் பழியாகக் கிடப்பார்கள். எட்டு வயதுப் பொன்னாச்சரம் இதனை அறிந்தவள்தான். இவள் தந்தை சாத்தய்யா கிடைக்காவலின் பொருட்டு வலசைப் பக்கம் போவதில்லை. கிடைக்காவல் இல்லாத நிலையிலும் அவன் வலசைக்கு வருவதில்லை. இது பொன்னாச்சரத்திற்கு உறுத்தலாக இருக்கிறது. இது பற்றித் தாய் குறுந்தாயிடம் கேட்கிறாள். இடைச்சாதியில் பிறந்தவர்கள் அனுபவிக்கும் சங்கடத்தைக் குறுந்தாயி மகளுக்கு விவரிக்கிறாள். தந்தை சாத்தய்யா மீது ஒரு நாளேனும் கால்போட்டுக் கொண்டு தூங்க வேண்டும் என்ற நியாயமான ஆசை ஒவ்வொரு நாளும் நிராசையாகப் போகும் ஆதங்கத்தாலேயே அப்பா வலசைக்கு வராததைப் பற்றிப் பொன்னாச்சரம் தாயிடம் வினவினாள். இதனால் தந்தை மீது இவள் வைத்த பாசமும் இவளது குழந்தையுள்ளமும் வெளிப்படும். தாயைக் காட்டிலும் தந்தையிடமே பொன்னாச்சரம் அதிகம் இழைபவளாகவும் அவனை நேசிப்பவளாகவும் எந்த நிலையிலும் விட்டுக் கொடுக்காது அவனுக்குப் பரிந்து பேசுபவளாகவும் காணப்படுகிறாள்.

ஒரு மழைக்காலத்தில் பசியோடு கத்தும் ஆட்டுக்குட்டிகளைத் திறந்து தாயாடுகளோடு சேர்ப்பிப்பது குறித்துச் சாத்தய்யாவுக்கும் குறுந்தாயிக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்படுகிறது. வாக்குவாதத்தில் குறுந்தாயின் கையே ஓங்கி நிற்கிறது. இறுதியில் மழை நின்று விட்டதால் வாக்குவாதம் முடிவுக்கு வருகிறது. பேசுகிறாள். பொன்னாச்சரத்தின் முன்னிலையிலேயே இது நிகழ்கிறது. “சரி சரி நொப்பன போயி நனைஞ்ச துண்டு துணிகள முறுக்கிப் போட்டுக் காஞ்சத எடுத்துக் கட்டிக்கிற சொல்லு” (Tamilselvi, 1998). “குட்டி கவுக்க வேணடாமாக்கும்” என்றான் சாத்தய்யா “அதெல்லாம் நாங்க கவுக்கிருவம்” “ஏம்மா அப்பாவ போகச் சொல்ற” (Tamilselvi, 1998).

“ஒனக்கு மட்டும் இஞ்ச நடந்ததெல்லாம் தெரியாதுல்ல” நொப்பன் மட்டும் நனைஞ்சி போயிட்டாகளாம். குட்டிக நனையாம கூண்டுக்குள்ளே கிடந்துட்டுதாம்” “யம்மா இப்படிச் சொல்லுற அப்பாவுக்கு மட்டும் குட்டிக மேல அக்கற இல்லையாக்கும்”. “நீ கண்டியாக்கும் இன்னமட்டும் என்னகிட்ட மோருனத்த பார்த்திருந்தாயானா இப்படிப் பேசமாட்டே”. “சரி விடும்மா” இவ்வுரையாடலில் தந்தையை விட்டுக்கொடுக்காத பொன்னாச்சரத்தின் பாச உணர்வு வெளிப்படக் காணலாம் (Tamilselvi, 1998).

இடையர்களுக்கு ஆடுகளின் மீது இயல்பாகவே பாசம் இருக்கும். பொன்னாச்சரமும் இதற்கு விதிவிலக்கு அல்ல. படுத்த படுக்கையாகிவிட்ட தன் மைக்கரை மொட்டையாட்டின் பால்மடிக்காம்பைச் சுண்டெலிகள் கடித்துவிட்டமைக்காக வன்மம் கொண்டு சுண்டெலி வகைகள் அனைத்தையும் பொன்னாச்சரம் ஒன்றுவிடாமல் அடைத்துவிடுகிறாள். அப்பா அம்மா இல்லாத நிலையில் அண்ணன் சேதுவோடு பொன்னாச்சரம் ஆடுகளை ஓட்டிச் செல்கிறாள். ஆடு மேய்ப்பதில் ஆர்வம் இல்லாத சேது தங்கையிடம் குளித்துவிட்டு வருவதாகப் பொய் சொல்லிவிட்டுப் பாதிலேயே நழுவி மறைந்துவிடுகிறான்.

அண்ணன் வருவான் என்று நெடுநேரம் காத்திருந்து ஏமாந்த பொன்னாச்சரம் வேறுவழியின்றி ஆடுகளையெல்லாம் தான் ஒருத்தியாகவே வளைத்து ஒன்று சேர்த்துத் தொழுவுக்குள் அடைக்கிறாள். தொழுவிற்குள் முன்பு ஒருமுறை தொழுவினைச் சோதனையிடுகிறாள். இவள் அடைத்து விட்டுப்போன வழிப்பாதை அப்படியே இருக்கிறது- ஆனால் அரிக்கனைக் கையில் எடுத்துக் கொண்டு ஆடுகளுக்கிடையே புகுந்து அவற்றைப் பலமுறை எண்ணிப் பார்த்தபோது, ஓர் ஆடு குறைவதைக் கண்டு திடுக்கிறாள். இவளால் நம்ப முடியவில்லை. தான் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்த நிலையிலும் ஒன்று காணாமல் போனதை இவளால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. அண்ணனின் வேலையாகத்தான் இருக்கும் என்று சந்தேகப்படுகிறாள். ஆடு களவு போனதை இவளால் தாங்கிக் கொள்ள முடியாத சூழலில் தலையில் கை வைத்துக்கொண்டு அழுகிறாள். அண்ணனையும் அப்பாவையும் நினைத்துப் புலம்பிக் கொண்டே படுத்து விடுகிறாள். நிராதராவாகத் தனித்து விடப்பட்ட போதும் பொன்னாச்சரத்திற்குத் தொழில் மீதுள்ள கவனத்தை இப்பகுதி உணர்த்துகிறது. பொன்னாச்சரம் பயந்தது போல இவளுடைய எதிர்கால வாழ்க்கை இருளடைந்து விடவில்லை. தந்தை சாத்தய்யா இறந்தபிறகு, அண்ணன் இராமுவோடு சேர்ந்து ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவளை அண்ணன் தங்கை தகாத உறவு என்று அடவாதம் அவனிடமிருந்து பிரித்துவிடுகிறது" (Tamilselvi, 1998). இதனால் தாய் குறுந்தாயி தனக்கான ஆடுகளைத் தனியே பற்றிக்கொண்டு பொன்னாச்சரத்தோடு மேய்த்து வருகிறாள். ஆயினும் மகள் பற்றிய கவலை அவளை அரித்துத் தின்கிறது. காரணம் பொன்னாச்சரம் பதினாறு வயதாகியும் பூப்படையாமல் இருக்கிறாள். மகள் சீக்கிரம் வயதுக்கு வந்துவிட்டால் இவளுக்கு நல்லதொரு வாழ்க்கை அமைத்து கொடுத்துவிட்டுப் பிறகு நிம்மதியாகக் கண் மூடலாம் என்பது அவளது எண்ணமாகும். எனினும் அந்த எண்ணம் நிறைவேறும் முன்பே உடல்நலம் குன்றி இறந்துவிடுகிறாள். அவள் இறப்பிற்குப் பிறகுதான் பொன்னாச்சரம் பருவமடைகிறாள். இஃது இவள் வாழ்வில் ஒருவன் எதிர்பட்ட பின்பே நிகழ்கிறது" (Tamilselvi, 1998).

பெற்றோர்கள் மறைந்த பின்பு உறவுகளும் ஒதுக்கிவிட்ட நிலையில் நிராதரவாகத் தன்பங்கு ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த பொன்னாச்சரத்திற்கு அனாதை பக்கிரியின் நட்பு கிடைக்கிறது. அவன் சந்திப்பிற்குப் பிறகுதான் வறண்டு கிடந்த இவளுடைய வாழ்வு மலர்ந்து மணம் பெறுகிறது. தந்தை சாத்தய்யாவும் தாய் குறுந்தாயியும் தாம் தனக்கு இப்படி ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்ததாக எண்ணி மகிழ்ச்சி அடைகிறாள்" உளமாரப் பக்கிரியை நேசித்த இவள் எந்த நிலையிலும் அவனை விட்டுவிடக் கூடாது என்று மனவுறுதி பூணுகிறாள் (Tamilselvi, 1998). உறவுகள் தனக்கு மணமுடிக்க முற்பட்டு வந்து கேட்டபோது ஒரேயடியாக மறுத்து விடுகிறாள்.

அண்ணன் இராமு நேரில் வந்து பாசத்தைக் காட்டி இவள் மனத்தை மாற்ற முயல்கிறாள். அனாதையான பக்கிரியைக் கைவிட மனமில்லாது பொன்னாச்சரம் தான் இன்னமும் வயதுக்கு வரவில்லை என்று பொய் சொல்லி அண்ணனைத் திருப்பி அனுப்புகிறாள். பக்கிரியின் பொருட்டு இவள் உள்ளத்தில் பெரும்போராட்டமே நிகழ்கிறது. அவன் மீது கருணை கொண்ட இவள் முடிவாகக் கடைசிவரை அவனோடு மட்டுமே சேர்ந்துவாழ்வது என்று தீர்மானிக்கிறாள். அதற்காகத் தன்னுடன் பிறந்த உறவுகளையும் பகைத்துக் கொள்கிறாள். புதினத்தின் முற்பகுதியைக் காட்டிலும் பிற்பகுதியில் பொன்னாச்சரத்தின் பாத்திரப்படைப்புச் செம்மையாக அமைகிறது. சாத்தய்யாவும் குறுந்தாயியும் உயிரோடு இருந்த வரையில் அடங்கிக் கிடந்த பொன்னாச்சரத்தின் குணநலன்கள் அவர்கள் இறப்பிற்குப் பின்பு ஒளிவிட்டுத் திகழ்கின்றன. அன்பு, பாசம், கருணை, பொறுமை, தன்மானம் ஆகிய பண்புகள் இவளது எண்ணம் சொல் செயல்களில் பிரதிபலிக்கின்றன. சாத்தய்யா இறந்தபிறகு பொன்னாச்சாரத்திற்குப் பொறுப்புகள் அதிகமாகிறது. கணவனை இழந்த துயரத்தாலும் முதுமையாலும்

நோயாலும் முன்புபோல ஆடுகளை மேய்க்கக் குறுந்தாயியால் முடியவில்லை. பொன்னாச்சரம் தனியொருத்தியாகவே தூக்கிக்கொண்டு காய்ச்சலால் நடக்க இயலாத அம்மாவை வழிநடத்திக் கொண்டு சிரமப்படுகிறாள். மூன்று நாள்களாகப் பயணம் மேற்கொண்டு இறுதியில் ஆற்றங்கரைக்கு வந்து சேர்கின்றாள். அம்மாவை எப்படியாவது ஆஸ்பத்திரிக்குச் அழைத்துப் போக வேண்டும் என்று நினைத்து அது முடியாமல் போகத்தான் மட்டும் ஆஸ்பத்திரிக்குச் சென்று கெஞ்சிக் கூத்தாடி மருந்து மாத்திரைகளை வாங்கி வருகிறாள். அதுபோதாதென்று அம்மா சீக்கிரம் குணமாக வேண்டும் என்று வேண்டிக்கொண்டு கன்னியாக்குறிச்சி எண்ணெய் போடுதல் பச்சிலை வைத்துக் கட்டுதல் முதலான வைத்தியங்களைச் செய்து பார்க்கிறாள். எதுவும் பலன் தராமல் நோய்முற்றிக் குறுந்தாயி இறந்து விடுகிறாள்" பெற்றவளைப் பிழைக்க வைப்பதற்குப் பொன்னாச்சரம் தன் சக்திக்கு மீறி எடுக்கும் முயற்சிகள் இவளுடைய தாய் பாசத்தைப் புலப்படுத்துவனாய் அமைகின்றன (Tamilselvi, 1998).

அம்மா இறந்தபிறகு பொன்னாச்சரம் உறவுகளால் முற்றிலும் உதாசினப்படுத்தப்படுகிறாள். இவள் பங்கு ஆடுகளைப் பிரிப்பதில் ஓரவஞ்சனை நடக்கிறது. அண்ணி இவளை இரத்தம் செத்த கன்னிபிருவக்குட்டி என்று பழித்துப் பேசுகின்றாள். பதினாறாம் நாள் காரியம் முடிந்தபிறகு எல்லோரும் அவரவர் இடங்களுக்குத் திரும்பியபோது ஒப்புக்குக் கூட யாரும் பொன்னாச்சரத்தைத் தங்களோடு வந்திருக்குமாறு அழைக்கவில்லை. அழைக்காததற்கு எட்டாம்போரில் பிறந்த பிள்ளை எனக் காரணம் காட்டப்பட்டது. இவையனைத்தையும் மிகப் பொறுமையாகச் சகித்துக் கொள்கிறாள் பொன்னாச்சரம். தெய்வங்களாகி விட்ட அப்பா அம்மா மட்டுமே இனித் தனக்குத் துணை என்ற நினைப்பில் இருக்கிறாள். இங்கு எல்லோராலும் கைவிடபட்டுத் தனித்துவிடப்பட்ட உருக்கமான அவலவுணர்ச்சி தூண்டும் பாத்திரமாகப் பொன்னாச்சரம் சித்தரிக்கப்படுகிறாள்" (Tamilselvi, 1998).

பக்கிரியின் சந்திப்பிற்குப் பிறகே பொன்னாச்சரத்தின் வாழ்வில் நல்லவையெல்லாம் நடக்கின்றன. சாத்தய்யாவும் குறுந்தாயியும் உயிரோடு இருந்தபொழுது செய்ய வாய்ப்பு நேராதவற்றை இப்பொழுது செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது. சந்தைக்குச் செல்ல முடிகிறது. ஆடுகளை விற்க முடிகிறது. பக்கிரிக்குத் துணிகள் வாங்கிக் கொடுக்க முடிகிறது. அவன் ஆட்டுக் கிடைக்கு வந்து சேர்ந்தது முதற்கொண்டே இவள் படிப்படியாய் மாறிப்போனதைத் தானே உணர்கிறாள். அம்மா அப்பாவை இழந்து ஆதரவற்ற நிலையில் இருந்த அவளது முகம் எப்போது பார்ப்பவரது பரிதாபத்தைக் கோருவது மாதிரியாகவே இருக்கும் சோர்வும் ஏக்கமும் ஒருவிதப் பரிதவிப்பும் எப்போதும் அவள் முகத்தில் குடி கொண்டிருக்கும். ஆனால் பக்கிரி வந்த பிறகு அவையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் அவளை விட்டு விலகியிருந்தன. மகிழ்ச்சியின் ரேகைகள் முகத்தில் மட்டும் அல்லாமல் உடலும் தெரியத் தொடங்கியிருந்தன". பொன்னாச்சரம் பாத்திரத்தின் முழுப்பரிணாம வளர்ச்சி நிலையினை இப்பகுதி உணர்த்துகிறது (Tamilselvi, 1998).

## முடிவுரை

மனிதனுக்கு உயிர்ப்பு உள்ளது போலவே இயற்கைக்கும் ஒரு வகையான உயிர்வாழ்வு உண்டு. எனவே இவ்விரண்டு பற்றி வரும் இலக்கியம் வாழ்க்கைப் பற்றி வரும் இலக்கியம் ஆகின்றது. இலக்கியத்தில் இடம்பெறும் உணர்ச்சியானது படைப்பாளரின் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்து எழுத்தாக வழிந்தோடிக் கலைவடிவம் பெற்றவுடன் அழகுருவம் பெற்றுப் பயில்வோரின் உள்ளத்தே பற்றிப் படர்ந்து மீண்டும் செயற்படும் ஒன்று. திறனாய்வு என்பது ஒரு உயிருள்ள, உயிரற்ற பொருளின் பண்புகளைப் பற்றி ஆராய்ந்து உண்மைத் தன்மையையும் அதில் கூறப்பட்ட நேர்எதிர் கருத்துக்களை எடுத்துரைப்பதாகும். பொன்னாச்சரம் புதினத்தின் முதல்நிலை மாந்தரான பொன்னாச்சரம் தொழிலார்வம் வெள்ளந்திமனம் குழந்தைத் தன்மை, தந்தை பாசம், அன்பு, கருணை, பொறுமை, தன்மானம், சுயகழிவிரக்கம், விடாமுயற்சி, ஆகியவை உடையவளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள். பெண் படைப்பாளர்களின் படைப்பில் வெளிப்படும் பெண்கள் அவர்களின் இன்பதுன்பங்களை உள்ளது உள்ளவாறே வெளிப்படுத்துகின்றன.

## References

Prema, R. (1998) Penniya Anukumuraikal, Tamil Buthakalaayam, Chennai, India.

Tamilselvi, S. (2005) Ponnasaram, Uyir Ezaluthu pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License